**மொனறாகல பிரதேச சபை**
**மொனறாகலை மாவட்டம்**

-----------------------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

## 1.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

2017 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 மார்ச் 28 ஆந் திகதி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அந்நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2018 ஜூன் 26 ஆந் திகதி தலைவருக்கு அனுப்பப்பட்டிருந்தது.

## 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இவ்வறிக்கையின் 1.3 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் ஏற்படுத்தும் தாக்கங்களை தவிர்த்து, மொனறாகல பிரதேச சபையின் 2017 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப் பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் கணக்கீட்டு குறைபாடுகள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டன.

(அ) முன்னைய ஆண்டில் உடைத்து அகற்றப்பட்ட ரூபா 349,337 ஆன கட்டிடங்கள் மீளாய்வாண்டின் போது நிதிக்கூற்றுக்களிலிருந்து அகற்றப்பட்டிருந்தமையால் காணி மற்றும் கட்டிடங்கள் அப்பெறுமதியால் கூடுதலாக காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஆ) புதிய சபை அலுவலக கட்டிடம் மற்றும் மொனறாகல வாரச்சந்தை நிர்மாணத்தின் போது செலுத்தப்பட்டிருந்த ரூபா 6,401,362 ஆன பெறுமதி சேர் வரி மூலதனமாக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) ரூபா 136,330 கூட்டுத்தொகையான 10 நூலகப் புத்தக இராக்கைகள் மற்றும் 02 சிறுவர் மேசைகள் மூலதனமாக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) மாகாண சபைகள் மற்றம் உள்ளூராட்சி அமைச்சினால் மொனறாகல பொது நூலகத்திற்கு வழங்கப்பட்டிருந்த ரூபா 83,900 கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(உ) ஆண்டில் கொள்வனவு செய்யப்பட்டிருந்த ரூபா 110,700 கூட்டுத்தொகையான நீர் மோட்டார் மற்றும் 1000 லீற்றர் நீர்த்தாங்கி என்பன மூலதனமாக்கப் பட்டிருக்கவில்லை.

(ஊ) களி பௌசருக்கு புதிதாக பொருத்தப்பட்டிருந்த ரூபா 95,000 பெறுமதியான காற்றுச்சராக்கி முறைமை மூலதனமாக்கப்பட்டிருக்கவில்லை.

(எ) முன்னைய ஆண்டுகளுக்குரிய ரூபா 53,119 ஆன ஊழியர் பிணை வைப்பு முதலீட்டுக் கணக்கிற்கு வரவு வைக்கப்படாமல் திரண்ட நிதிக்கு வரவு வைக்கப்பட்டிருந்தது.

(ஏ) முதலீடு செய்யப்பட்டிருந்த ரூபா 91,120 ஆன ஊழியர் பிணை வைப்பு நடைமுறைச் சொத்துக்களின் கீழ் முதலீடாக காண்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஐ) வீத வரி அறவிடும் போது வழங்கப்பட்டிருந்த ரூபா 170,728 ஆன கழிவு வீதவரிக் கணக்கில் செலவு வைக்கப்படாமல் நிலுவை வீத வரிக் கணக்கில் செலவு வைக்கப்பட்டிருந்தது.

(ஒ) அரசாங்க நிறுவனமொன்றுக்காக நிறைவேற்றப்பட்டிருந்த நிர்மாண வேலையொன்றிற்காக கிடைத்த ரூபா 361,634 வைப்புக் கணக்கிற்கு செலவு வைக்கப்பட்டு நிர்மாணக் கடன்கொடுத்தோரின் கீழும் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(ஓ) அனுமதியற்ற நிர்மாணமொன்றுக்காக அறவிடப்பட்ட ரூபா 150,000 ஆன செய்முறைக் கட்டணம் வருமானத்திற்கு செலவு வைக்கப்படாமல் பொது வைப்பு கணக்கிற்கு செலவு வைக்கப்பட்டிருந்தது.

**1.3.2 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்**

**(அ) பெற வேண்டிய கணக்குகள்**

(i) 1987 ஆம் ஆண்டின் போது சபைக்குச் சொந்தமான மின்வழங்கல் சேவைகள் கையளிப்பதற்காக இலங்கை மின்சார சபையிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 4,771,469 மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அறவிடுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) இனங்காணப்படாத ஏனைய நிலுவை வருமானமாக காண்பிக்கப்பட்டுள்ள ரூபா 5,260,292 ஆன மீதிகளை மீளாய்வாண்டிலும் அறவிடுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**(அ) செலுத்த வேண்டிய கணக்குகள்**

1989 மற்றும் 1990 ஆம் ஆண்டுகளில் நகர அபிவிருத்தி அதிகாரசபையினால் நிர்மாணிக்கப்பட்டு நகர சபைக்கு கையளிக்கப்பட்டிருந்த கடைகளுக்காக செலுத்த வேண்டிய ரூபா 4,872,912 தொகை மீளாய்வாண்டின் இறுதி தீர்வு செய்வதற்கு நடவடிக்கைகள் எடுத்திருக்கவில்லை.

**1.3.3 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை**

தேவையான தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாத காரணத்தால் ரூபா 11,204,277 ஆன 03 சொத்து விடயங்களையும் ரூபா 4,872,912 ஆன பொறுப்பு விடயமொன்றையும் கணக்காய்வின் போது திருப்திகரமாகச் சான்றுறுதிப்படுத்த முடியாதிருந்தன.

**1.3.4 இணக்கமின்மைகள்**

**சட்டங்கள், விதிகள் பிரமாணங்கள் முகாமைத் தீர்மானங்களுடன் இணங்காமைகள்**

சட்டங்கள், விதிகள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| சட்டங்கள், விதிகள் பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் தொடர்பு | | பெறுமதி | இணக்கமின்மை |
|---|---|---|---|
| | | ரூபா | |
| (அ) | 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் | | |
| | 158, 161, 162, 163 மற்றும் 166 ஆம் பிரிவுகள் | 12,016,808 | நிலுவை வீதவரி தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) | 1988 பிரதேச சபை (நிதி மற்றும் நிர்வாகம்) | | |
| | 214 ஆம் விதி | - | ஒவ்வொரு ஆண்டின் இறுதியின் போது 203 ஆம் இலக்க விதியின் மூலம் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ள வகையில் மெய்மையாய்வு சபையொன்று மூலம் களஞ்சியப் பொருட்கள் தொடர்பாக மெய்மையாய்வு செய்யப்பட்டிருக்க வில்லை. |
| (இ) | இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் தாபனவிதிக் கோவையின் XXIV ஆம் அத்தியாயம் | 260,308 | அறவிடப்படாமல் காணப்பட்ட ஊழியர் கடன் மீதி தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

## 2 நிதி மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2017 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந் ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 23,853,827 ஆக காணப்பட்டதுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 23,436,162 ஆக இருந்தது.

### 2.2 வருமான நிருவாகம்

#### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரித்தாக சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| வருமான விடயம் | மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை | மதிப்பிடப்பட்ட வருமானம | பட்டியலிட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் நிலுவை |
|---|---|---|---|---|---|---|---|---|
| | ரூபா. | ரூபா. | ரூபா. | ரூபா. | ரூபா. | ரூபா. | ரூபா. | ரூபா. |
| வீதவரி மற்றும் வரி | 15,628,318 | 15,604,660 | 8,204,057 | 7,400,603 | 15,299,210 | 15,260,311 | 5,529,860 | 9,730,451 |
| வாடகை | - | 7,748,646 | 6,872,640 | 876,005 | - | 8,346,855 | 6,206,145 | 2,140,710 |
| அனுமதிப்பத்திர கட்டணங்கள் | - | 680,000 | 1,263,850 | - | - | 755,765 | 755,765 | - |

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| ஏனைய வருமானம் | - | 20,182,480 | 8,758,528 | 11,423,953 | - | 17,238,364 | 10,522,724 | 6,715,640 |
| மொத்தம் | 15,628,318 | 44,215,786 | 25,099,075 | 19,700,561 | 15,299,210 | 41,601,295 | 23,014,494 | 18,586,801 |

**2.2.2 வருமான சேகரிப்பின் செயலாற்றல்**

மீளாய்வாண்டில் பட்டியலிடப்பட்ட வருமானம் ரூபா 44.2 மில்லியனான மொத்த வருமானத்தில் ஆண்டின் இறுதி வரையில் ரூபா 25 மில்லியன் மாத்திரம் சேகரிக்கப்பட்டிருந்ததுடன் அது மொத்த பட்டியலிடப்பட்ட வருமானத்தில் 57 சதவீதமான குறைந்த பெறுமதி காணப்பட்டது.

**2.2.3 வீதவரி மற்றும் வரி**

(அ) மீளாய்வாண்டில் பட்டியலிடப்பட்ட ரூபா 11,945,130 ஆன வீதவரி வருமானத்தில் ஆண்டின் இறுதியளவில் ரூபா 5,176,153 சேகரிக்கப் பட்டிருந்ததுடன் அது மொத்தமாக பட்டியலிடப்பட்ட பெறுமதியில் 43 சதவீதம் அளவிலான மிகவும் குறைந்த பெறுமதியாக இருந்தது.

(ஆ) மீளாய்வாண்டின் ஆரம்பத்தின் போது காணப்பட்ட ரூபா 21,011,920 தொகையான நிலுவை வீதவரி வருமானத்தில் ரூபா 8,995,112 சேகரிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் நிலுவை அறவீடு 43 சதவீதம் அளவிலான மிகவும் குறைந்த பெறுமதியொன்றாக இருந்தது.

**2.2.4 வாடகை**

(அ) முன்னைய ஆண்டுகளில் குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்த 04 ஆதனங்களிலிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 770,097 தொகை தொடர்பாக 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 159 ஆம் பிரிவின் பிரகாரம் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மொனறாகலை நகரில் 27 மற்றும் 29 ஆம் இலக்க மீன் கடைகளுக்குரிய ரூபா 26,237 ஆன வாடகை அறவிடப்பட்டிருக்கவில்லை.

(இ) கஹபட 01 ஆம் இலக்க கடைக்குரித்தாக ரூபா 144,000 ஆன குத்தகை வாடகையில் ரூபா 101,000 தொகை ஆண்டின் இறுதி வரையிலும் அறவிடப்பட்டிருக்கவில்லை.

**2.2.3 ஏனைய வருமானம்**

(அ) மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரிய ரூபா 912,950 ஆன நீர்க் கட்டணங்கள் ஆண்டின் இறுதி வரையிலும் அறவிடப்பட்டிருக்கவில்லை.

(ஆ) சபைக்குச் சொந்தமான பெக்கோ லோடர் இயந்திரத்தை வாடகைக்கு வழங்கியமைக்கான நீண்டகாலமாக அறவிடப்படாமல் காணப்படும் ரூபா 70,027 தொகையை மீளாய்வாண்டின் போதும் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2016 நவம்பர் 25 ஆந் திகதிய 1995 ஆம் இலக்க வர்த்தமானிப் பத்திரத்தின் பிரகாரம் சபை அதிகாரப் பிரதேசத்தில் நடாத்திச் செல்லப்படும் இலங்கை சுற்றுலா சபையில் பதிவுசெய்யப்பட்ட 4 ஹொட்டெல்களிலிருந்தும் தங்குமிடங்களிலிருந்தும் 01 சதவீதம் வரையான வரி அறவிடப்பட்டிருக்கவில்லை.

**2.2.4 நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்**

மாகாண சபையின் பிரதான செயலாளரிடமிருந்தும் மற்றும் ஏனைய அதிகாரிகளிடமிருந்தும் 2017 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு கிடைக்க வேண்டியிருந்த நீதிமன்றத் தண்டப்பணம் ரூபா 805,108 மற்றும் முத்திரை கட்டணங்கள் ரூபா 10,314,821 ஆக இருந்தன.

**2.3 மிகை விதிப்புக்கள்**

பிரதேச சபைச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் பொறுப்பு வாய்ந்த நபர்களுக்கு எதிராக என்னால் முன்னைய ஆண்டுகளின் போது விதிக்கப்பட்டிருந்த மிகை விதிப்புக்கள் தொடர்பாக மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு ரூபா 665,613 இற்கான தொகை ஒன்று அறவிடப்பட வேண்டியிருந்தது.

**3 செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 செயலாற்றல்**

பிரதேச சபை சட்டத்தின் 3 ஆவது பிரிவின் கீழ் பொதுச் சுகாதாரம், பொதுப் பயன்பாட்டு சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் நிரவகித்தல், மக்களின் நலனோம்புகை மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டிய பணிகளை நிறைவேற்றுதல் தொடர்பான வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

**(அ) உப விதிகள்**

பிரதேச சபை சட்டத்தின் 126 ஆவது பிரிவின் கீழ் 30 பிரதான விடயங்களை நிறைவேற்றுவதற்காக உப விதிகள் பிறப்பிக்கப்பட வேண்டிய போதிலும் 2017 திசெம்பர் 31 ஆந் திகதி வரை 14 பிரதான விடயங்களுக்கு மாத்திரம் உப விதிகள் பிறப்பிக்கப்பட்டிருந்தன.

**(ஆ) செயல்நடவடிக்கைத் திட்டம்**

பிறப்பிக்கப்பட உப விதிகளின் பிரகாரம் சபையினால் நிறைவேற்றப்பட வேண்டிய பணிகள் தீர்மானிக்கப்பட்டிருந்த போதிலும் வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

**(இ) திண்மக் கழிவுப்பொருள் முகாமைத்துவம்**

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் 1816/43 ஆம் இலக்க 2013 யூன் 28 ஆந் திகதிய வர்த்தமானி பத்திரத்தின் மூலம் வெளியிடப்பட்ட ஊவா மாகாண உப விதிகளை பின்பற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்த போதிலும் அதன் 13 ஆவது பகுதியின் 2 ஆம் பிரிவின் பிரகாரம் கழிவுப்பொருள் வரி விதிக்கப்பட்டு கழிவுப் பொருள் முகாமைத்துவ செலவினம் மீள் நிரப்பட்டிருக்கவில்லை.

**(ஈ) நிலைபேறான அபிவிருத்தி இலக்கு**

நிலைபேரான அபிவிருத்தி நோக்கங்கள் தொடர்பான 2030 நிகழ்ச்சி நிரல் பற்றி சபை தெரிந்துகொள்ளாமையால் அந் நோக்கங்களுக்கான உலகலாவிய குறிகாட்டிகள் மூலம் சபை அதிகாரப் பிரதேசத்தில் பொது மக்களின் வாழ்க்கை நிலைமை மற்றும் சுகாதாரத்தை மேம்படுத்துவதற்கான நீண்டகாலத் திட்டம் 2018 மே 25 ஆந் திகதி அளவிலும் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.2. மனித வள முகாமைத்துவம்

07 பதவிகளுக்குரிய அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரை மிகைத்து 33 பேர் ஆட்சேர்ப்பு செய்யப்பட்டிருந்தனர்.

### 3.3 செயற்பாட்டு வினைத்திறனின்மை

(அ) சபையினால் குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்த சகல கடைகளுக்காக குத்தகை அறவிடும் போது உடன்படிக்கையின் பிரகாரம் தாமதக் கட்டணங்களை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 136 ஆம் பிரிவு மற்றும் 1980 திசெம்பர் 31 ஆந் திகதிய 1980/46 ஆம் இலக்க உள்ளூராட்சி மன்ற ஆணையாளரின் சுற்றறிக்கையின் பிரகாரம் சபைக்குச் சொந்தமான 136 கடைகளின் வாடகையை மதிப்பீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) புதிய பேருந்து நிலையத்தில் 11 கடைகள் குத்தகைக்கு வழங்கப்பட்டு 17 ஆண்டுகள் கடந்திருந்த போதிலும் குத்தகையாளருடன் உடன்படிக்கை கைச்சாத்திட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) புதிய பேருந்து நிலையத்தில் 03 கடைகள் குத்தகைக்கு வழங்கும் போது பெறுகை நடைமுறை பின்பற்றப்பட்டிருக்கவில்லை.

### 3.4 பெறுகைகள்

#### 3.4.1 பெறுகை திட்டம்

மீளாய்வாண்டிற்காக பிரதேச சபையினால் வருடாந்த பெறுகை திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

#### 3.4.2 வழங்கல் மற்றும் சேவைகள்

(அ) சபையினால் பெறுகை அறிவித்தல் வெளியிடும் போது வழங்குனர்களை மட்டுப்படுத்தக்கூடிய நிபந்தனைகள் உள்ளடக்கப்பட்டு தேசிய போட்டி கூறுவிலை கோரப்பட்டிருந்தது.

(ஆ) உற்பத்தியாளரின் அல்லது அனுமதிபெற்ற விற்பனையாளரிடமிருந்து உத்தரவாதச் சான்றிதழ் இல்லாமல் ரூபா 863,990 தொகையான 07 கணனிகள், கைவிரலடையால இயந்திரமொன்றும் ஸ்கேன் இயந்திரமொன்றும் டிஜிடல் கமரவொன்றும் கொள்வனவு செய்யப்பட்டிருந்தது.

(இ) உபகரணங்களை கொள்வனவு செய்வதற்கு முன்னர் தொழில்நுட்ப விதந்துரைப்புக்கள் தயாரிக்கப்படாமல் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன.

#### 3.4.3 ஒப்பந்த நிர்வாகம்

(அ) நிர்மாண கைத்தொழில் சமூக அமைப்பிற்கு கையளிக்கும் போது திணைக்களத் தலைவர் பெயரிடும் முகவர் ஒருவரினதும் பிரதேச செயலாளர் பெயரிடப்படும் இரண்டு முகவர்களுடன் கூடிய குழுவொன்றின் பரிந்துரை பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஆ) நிறைவேற்றப்பட்ட கொங்கிரீட் வீதிகளின் ஓரத்தை (sholders) நிரப்புவதற்கு மதிப்பீடுகளில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

## 04. நல்லாளுகையும் கணக்களிப்பொறுப்பும்

### 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

மீளாய்வாண்டிற்காக சபையினால் பிரதேச சபையின் மதிப்பிடப்பட்ட வருமானம், செலவினம் மற்றும் உள்ளபடியான வருமானம், செலவினங்களுக்கிடையே கருத்திற் கொள்ளக்கூடிய விலகல்களின் பிரகாரம் வருமான மற்றும் செலவினக் கட்டுப்பாட்டின் போது பாதீடு ஆக்கபூர்வமாக கட்டுப்பாட்டுக் கருவியொன்றாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

### 4.2 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு

மீளாய்வாண்டிற்காக சபையினால் போதியளவில் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு கூட்டங்களை நடாத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 05 முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

கணக்காய்வின் போது இனங்காணப்பட்ட குறைபாடுகள் சபையின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டதுடன். பின்வரும் கட்டுப்பாட்டு துறைகள் தொடர்பாக சபையின் விஷேட கவனம் கோரப்படுகின்றது.

| முறைமைகள் | குறைபாடுகள் |
|---|---|
| (அ) கணக்கீடு | கணக்கேடுகள் மற்றும் புத்தகங்கள் நாளதுவரையாக பேணப்படாமை |
| (ஆ) சொத்துக்கள் / ஆதனங்கள் | (i) பதிவேடுகளுக்கு உட்படுத்தாமை<br>(ii) பிரதான பொருளிருப்பு பதிவேடு பேணப்படாமை |
| (இ) மனித வளங்கள் முகாமைத்துவம் | பதவியணியினர் அங்கீகரிக்கப்படாமை |
| (ஈ) ஒப்பந்த நிர்வாகம் | போதியளவு மேற்பார்வை செய்யப்படாமை |